MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

# கலிங்கத்துப்பரணியில் பெண்களின் நிலையும் தொல்காப்பிய மெய்பாடும்

**ஜெ.பாண்டியராஜன்**
சுற்றுலா மற்றும் உணவு மேலாண்மை துறைத்தலைவர்
ஸ்ரீகாளீஸ்வரி கல்லூரி(தன்னாட்சி),சிவகாசி.
6374947973 - rpandiya807@gmail.com
DOI 10.5281/zenodo.18518198.

Abstract :

literary works focus on praising deities and individuals as their subject matter. These are called Prabandham or minor literature in Sanskrit. "A poem composed for the warrior who defeated a thousand elephants in battle is called Parani," is a verse from the Ilakkana Vilakka Paattiyal (a treatise on Tamil prosody). It refers to praising a warrior who achieved victory in battle. This research examines the concept of 'meyppadu' (emotions/expressions) in Tolkappiyam, and the situation and mental fortitude of women on the battlefield.

KeyWords : Poem – Kalingathuparani – Tholkappiyam - Meipaadu

சிற்றிலக்கியங்கள் தெய்வப் போற்றலையும் தனிமனிதப் போற்றலையுமே தனது பாடுபொருளாகக் கொண்டு இயங்குகின்றது. இவை வடமொழியில் பிரபந்தம் என்றும் சிற்றிலக்கியம் என்றும் அழைக்கப் பெறுகிறது.

**”ஆனை ஆயிரம் அமரிடை வென்ற**
**மாணவனுக்கு வகுப்பது பரணி”**

என்பது இலக்கண விளக்கப்பாட்டியல் சூத்திரம் .போரில் வெற்றி பெற்ற வீரனைச் சிறப்பித்து பாடுவது. இதில் தொல்காப்பிய மெய்ப்பாடு பற்றியும் , போர்களத்தில் பெண்களின் நிலை , பெண்கள் மன ஆளுமை குறித்து ஆய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

**மெய்ப்பாடுகள்**

மெய்ப்பாடு என்பது உள்ளத்து உணர்ச்சி எனலாம் . இம்மெய்ப்பாடு நகை, அழுகை, இளிவரல், மருட்கை,அச்சம், பெருமிதம், உவகை, வெகுளி என்பனவாம்.இதனையே தொல்காப்பியர்,

**”நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப”(தொல். பொருள்.மெய்.2)**

என்று கூறியுள்ளார்.

**நகைச்சுவை**

இயற்கைக்கு மாறாக எதையாவது நாம் உணர நேர்ந்தால் அது நமக்கு நகைப்பை ஏற்படுத்தும். அத்தகைய நகைச்சுவையை கலிங்கத்துப்பரணியில் பேய்கள் கூழ் இட்டு உண்ணும் பகுதியில் நகைச்சுவையை ஏற்படுத்தியு ள்ளது.பேய் பசியால் செவியடைத்து போகின்றது . கூழைக் கண்டதும் காதடைப்பு நீங்குகிறது. நாவை துழாவிக் கொண்டு உண்ணத் தயாராகும் நிலையை

**”அடைத்த செவிகள் திறந்தனவால்**
**அடியேற் கென்று கடைவாயைத்**


http://Creativecommons.org//license/by/4.0/.

**துடைத்து நக்கிச் சுவைகாணும்"**

இதன் வழி அறிய முடிகின்றது . மேலும் ஒரு பேய்க்கு உணவு உண்பதற்கு பாத்திரம் கிடைக்கவில்லை. அதனால் போர்க்களத்தில் இறந்து கிடந்த வெள்ளை யானைத்துதிக்கையின் ஒரு நுனியை பல்லின் மேல் நிறுத்திக் கொண்டு மறுபக்கத்தில் கூழை வார்க்கும் படி வேண்டி நிற்பது எள்ளல் தன்மையை ஏற்படுத்துகிறது.

**அழுகை**

பரணியில் போர்க்களத்தில் பல நிகழ்ச்சிகள் அழுகைச் சுவையுடன் இடம் பெற்றுள்ளதை காணலாம். துன்பத்திலும் இன்பத்தை காண்பது தான் ஆன்மாவை உணர்வது என்று அறிஞர்கள் கூறுவார்கள். இந்நூலில் போர்களத்தில் தன் கணவனை இழந்த பெண்ணொருத்தி தன் கணவன் முகத்தைக் கண்டு தன் உயிரைத் துறக்க நினைக்கிறாள் . அதனால் போர்களத்துக்கு வந்து சாதகரையும், இடாகினியையும் அவ்வுடலைக் காட்டுமாறு வினவுவதை,

**"தம் கணவருடன் தாமும் போக என்றே**
**சாதகரை கேட்பாரே தடவிப் பார்ப்பார்**
**எங்கணவா் கிடந்த இடம் எங்கே என்று என்று**
**இடாகினியைக் கேட்பாரைக் காண்மின் காண்மின்"**

இப்பாடல் வழி அறிய முடிகின்றது.

**இளிவரல்**

முதுமை, பிணி, வருத்தம், மென்மை என்னும் நான்கின் வழி தோன்றுவது இளிவரல் . காளிதேவி முது பேயை அழைத்து வர கட்டளையிட நெடுபேய் அழைத்து வந்தது . அப்முதுபேய் காளிதேவியின் அருகில் அஞ்சி அஞ்சி வந்து நின்று வணங்கி பெண் தெய்வம் ! உன் கட்டளைக்கு பயந்து மீண்டும் உன்னை அணுகிப் பிழைக்க வந்துள்ளோம் என்று கூறுவதை

**"பிழைக்க வந்தனம் பொறுத்து எமக்கு அருள்செய்**
**பெண் அணங்கு என்று வணங்கவே"**

இதன் வழி அறிய முடிகின்றது.

**மருட்கை**

நாம் எதிர்பாராத ஒன்று நிக ழ்ந்து விட்டால் அது நம்மை வியப்பில் ஆழ்த்தும் . இமயத்தில் இருந்து மீண்ட முதுபேய் காளியின் முன்பு அவை கற்ற இந்திர சாலங்கள் அனைத்தையும் காட்டுவது வியப்பில் ஆழ்த்துகின்றன.

**"மாறி யிக்கையில் அழைக்க மற்றவை**
**மதகரித் தலைகள் ஆன பார்"**

இப்பாடலில் ஒரு கையில் யானையி ன் துதிக்கையை வைத்து அதை மறு கையில் மாற்றும் போது யானை தலையாகிறதைக் காட்டுகிறது.

**அச்சம்**

மனிதா்களின் உடன் பிறந்த சொத்து அச்சம் . அச்சம் உணா்வே இல்லாதவா்கள் இவ்வுலகில் இல்லை . பரணியில் இமயத்திலிருந்து வந்த முதுபேயின் இந்திர சாலங்களைக் கண்ட அலகைகள் அவ்வித்தைகளைக் கண்டு பயந்து அதை நிறுத்துமாறு காளி தேவியை வேண்டுவது மட்டுமல்லாமல்

**"இக்கணம் ஆளும்இ ளித்தவிர் விச்சை**
**எனக் கை விதிர்த்தலுமே"**


http://Creativecommons.org//license/by/4.0/.

**MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.**

**முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.**

VOLUME – III ISSUE - II

FEB – 2026 E-ISSN : 2584 – 1238

மாயாசாலத்தை நிறுத்தாவிட்டால் பேய் கூட்டங்கள் அழிந்து போகும் என்பதை அறிய முடிகின்றது.

**பெருமிதம்**

வீரனது அடையாளம் போர்க்களத் தில் முன் நிற்பது மட்டுமல்ல முற்றும் உணர்ந்த முனிவர்களும் சிறந்த வீரன் என்று சொல்லும் அளவிற்கு இருக்க வேண்டும் . அதுதான் வீரனுக்கு பெருமை.

**"கொடுத்தசிரம் கொற்றவையைப் பரவு மாலோ**
**குறையுடலும் கும்பிட்டு நிற்கு மாலோ"**

இதில் வீரர்கள் சிலர் தலைகளை அறுத்துத் தேவியின் கையில் கொடுப்பர் . அறுப்பட்ட தலைகள் தேவியை துதிக்கும்.

**வெகுளி**

பகைவர்கள் செய்த தீயச் செயல்களை நினைத்து மனம் வருத்தும் நிலையை விரோதம் என்பர். விரோதத்தின் அடிப்படையில் காணப்படுகின்ற சுவையே வெகுளி என்பர் . தனக்கு திறை செலுத்தாததால் குலோத்துங்கன் அனந்தப்பன் நாட்டின் மீது படையெடுக்கிறான் . இதனால் அனந்தப்பன் சினம் கொள்வதை

**"வெந்தறுகண் வெகுளியினால் வெய்து உயிர்த்துக்**
**கையுடைத்து வியர்த்து நோக்கி"**

கோபத்தோடு இருப்பதை இதன் மூலம் அறிய முடிகின்றது.

**உவகை**

புறப்பொருள் அனுபவத்தை அகப்பொருள் அனுபவத்துடன் பிணைத்துக் காட்டும் கவிஞரின் திறன் வியக்கதக்கது எனலாம்.

**"முருகிற் சிவந்த கழுநீரும்**
**முதிரா இளைஞர் ஆருயிரும்**
**திருகிச் செருகும் சூழல்மடவீர்**
**செம்பொற் கபாடம் திறமினோ"**

இதில் தலைவரைப் பிரிந்த தலைவியர் தம் கணவர் விரைவில் வந்து சேர்வாரா ? மாட்டாரா? என்பதை அறிவதற்காக மணலில் அமர்ந்து வட்டமான பெரிய கோடு வரைந்து அதன் உள்ளே சிறு சிறு வளையல்களைக் போட்டு பின் அதனை இரண்டு இரண்டாக எண்ணுவர் . அக்கோடு ஒற்றை எண்ணாக இருந்தால் விரைவில் வருவார் என்றும் எண்ணி மகிழும் நிகழ்வை அறியலாம்.

**போர்களத்தில் பெண்களின் வீரம்**

பழங்காலம் தொட்டே பெண்கள் மகத்துவம் வாய்ந்தவர்கள். பெண்கள் நாட்டின் கண்கள் என்று போற்றப்படுகிறார்கள்.

**"அச்சமும் நாணும் மடனும் முத்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற்குரிய" (தொல்.களவு 5)**

என்று தொல்காப்பியர் பெண்கள் பற்றி கூ றியுள்ளார். பரணியில் பெண்கள் தான் போர்களத்திற்குச் சென்று போரிடா விட்டாலும் தன் கணவனுக்கு உறுதுணையாக இருப்பவள் மனைவி . போர்களம் போருக்கு முன்பு விட பின்பு தான் அச்ச உணர்வை தரும் . அப்படிப்பட்ட நிலையில் வீரனின் மனைவி போரில் இறந்த செய்தியறிந்து தன் கணவனை தேடி அங்கு செல்ல வெட்டப்பட்டு கிடக்கும் கணவனனின் தலையை கையில் எடுத்தப் படி கைகளையும், கால்களையும் தேடுவதை,



http://Creativecommons.org//license/by/4.0/.

**MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.**

**முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.**

**VOLUME – III** **ISSUE - II**

FEB – 2026 **E-ISSN : 2584 – 1238**

**"போர் முகத்தில் எவர் வரினும் புறங்கெடாத**
**பரு வயிரத்தோள் எங்கே? எங்கே என்று**
**பயிரவியைக் கேட்பாளைக் காண்மின்! காண்மின்!"**

இப்பாடல் வழி அறிய முடிகின்றது.

**தொகுப்புரை**

சுவைகளின் களஞ்சியம் கலிங்கத்துப்பரணி எனலாம் . இதில் குலோத்துங்கனின் வெற்றி , மெய்ப்பாடுகளும் நிறைந்து வந்துள்ளதை அறிய முடிகிறது . மேலும் போர்க்களத்தில் தன் கணவனுக்காக அவர்களின் வீரம் , செயல்பாடு, தன்னை இழக்கக் கூடிய நிலை போன்றவற்றை இவ்வாய்வின் வழி அறிய முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. இளம்பூரணர் உரை,தொல்காப்பியர், சாரதா பதிப்பகம், சென்னை.
2. கலிங்கத்துப்பரணி,ஜெயங்கொண்டார், பாரிநிலையம், சென்னை.



http://Creativecommons.org//license/by/4.0/.